# 24

# “உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக் கடவது”

## மத்தேயு 5:14-16, ஒரு ஆழ்ந்தக் கண்ணோட்டம்

*“நீங்கள் நினைப்பதை விட நீங்கள் அதிகம் மதிப்பு வாய்ந்தவராக இருக்கின்றீர்கள்” என்ற பிரசங்கத்தில், நாம் மலைப் பிரசங்கத்தின் இரண்டாம் பாகத்தின் மீதான நமது படிப்பைத் தொடங் கினோம்: மத்தேயு 5:13-16. நாம், “நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்” என்ற வார்த்தைகளில் உள்ளடங்கி இருப்பது என்ன என்பது பற்றிப் பேசினோம். இந்தப் பிரசங்கத்தில், நாம் வசனங்கள் 14 முதல் 16வரை உள்ள பகுதியைப் பற்றிக் கலந்துரையாடுவோம்:*

> *நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக்[1] கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.*

### ஒரு பாராட்டு

*“நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.” நீங்கள் இந்தக் கூற்றைத் தீவிரமாக ஆழ்ந்து சிந்தித்தால், இது உங்கள் சிந்தையைத் தள்ளாடச் செய்யும். நாம் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் தேவனின் திட்டங்கள் மற்றும் நோக்கங்களில் பங்கேற்பதுடன், நாம் தேவன் மற்றும் இயேசு ஆகியோரின் பண்புகளிலும் ஓரளவுக்குப் பங்கடைகின்றோம் என்று இவ்வார்த்தைகள் நமக்குக் கூறுகின்றன. யோவான், “தேவன் ஒளியாயிருக்கிறார்” என்று கூறினார் (1 யோவா. 1:5). இயேசு, “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்” என்று கூறினார் (யோவா. 8:12). இந்த வசனங்களின் மூலமாக, இயேசு தமது பின்பற்றாளர்களை சுட்டிக் காண்பித்து அவர்களிடத்தில், “நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள்” என்று கூறுகின்றார்.[2] இது உங்களைத் தேவனுடைய பிள்ளையென்ற வகையில் தலைநிமிர்ந்து*

*உயர்ந்திருக்கச் செய்யாவிட்டால், வேறு எதுவும் அதைச் செய்யாது.*

*"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்ற சொல்விளக்கத்தின் மூலம் இயேசு எதை அர்த்தப்படுத்தினார்? உப்பு மற்றும் வெளிச்சம் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு எதிர்மறை ஒப்பீட்டைச் சிந்தித்துப் பாருங்கள். அந்த நாட்களில் உப்பின் அடிப்படை நோக்கமானது பெரும்பாலும் எதிர்மறையானதாகவே இருந்தது: சிதைவைத் தடுத்தல். வெளிச்சத்தின் அடிப்படை நோக்கமானது நேர்மறையானதாக உள்ளது: இருளை விரட்டுதல்.*

*இயேசுவின் உருவகம் நமக்கு மீண்டும் உலகத்தைப் பற்றியும் கிறிஸ்தவர்களைப் பற்றியும் சில விஷயங்களைக் கூறுகிறது. இவ்வுலகம் இருளில் உள்ளது என்று இது நமக்குக் கூறுகிறது. உலகத்தில் உள்ளவர்கள் இதை ஒப்புக்கொள்ள விரும்புவதில்லை. சிலவேளைகளில் மக்கள் வேதாகமத்தைப் புறக்கணிக்கின்றபோது, "நாம் ஒளியூட்டப்பட்ட ஒரு யுகத்தில் வாழ்கின்றோம்" என்று கூறுகின்றார்கள். நீங்கள் ஒருவேளை, "புதிய ஆதாரம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது" என்ற சொல்விளக்கத்தைக் கேட்டிருக்கலாம். ஆயினும் இவ்வுலகமானது பாவத்தின் இருளினால் போர்த்தப்பட்டுள்ளது என்பதே உண்மையாக உள்ளது. தேவனுடைய பரிசுத்த வசனத்தினால் ஒளியூட்டப் பெறாத ஒவ்வொரு புத்திகூர்மையும் இருளாக்கப்பட்ட புத்திகூர்மையாகவே உள்ளது.*

*உலகம் உண்மையில் இருளையே விரும்பித் தேர்ந்து கொள்கிறது. ஒளியானது "இருளில் மறைந்திருக்கிறவைகளை வெளியரங்கமாக்குகிறது" (1 கொரி. 4:5). இயேசுவின் நாட்களில் வாழ்ந்திருந்த மக்கள், தங்கள் "கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகின்றார்கள்" என்று இயேசு கூறினார் (யோவா. 3:19). ஒருமுறை என் மனைவியும் நானும் வாடகைக் குடியிருப்பு ஒன்றைச் சொந்தமாக்கிக் கொண்டிருந்தோம். ஒருமுறை, அதில் இருந்த குடும்பத்தார் வீட்டைக் காலி செய்துவிட்டுச் சென்ற பின்பு அடுத்த நாளில், வீட்டைப் பார்வையிடுவதற்காக நாங்கள் சென்றோம். அவர்கள் அவ்வீட்டைப் பரிதாபமான நிலையில் விட்டுச் சென்றிருந்தார்கள், அதில் குப்பை நிரம்பியிருந்தது. நாங்கள் மின்விளக்கை எரியச் செய்தபோது, ஆயிரக்கணக்கான கரப்பாண்பூச்சிகள் எல்லாத் திசைகளிலும் வேகவேகமாக ஓடி ஒளிந்தன! கரப்பாண்பூச்சிகள் வெளிச்சத்தை விரும்புவதில்லை - மற்றும் பாவம் நிறைந்த உலகமும் வெளிச்சத்தை விரும்புவதில்லை. இருந்தபோதிலும், இவ்வுலகத்திற்கு வெளிச்சமே மிகவும் துல்லியமாகத் தேவைப்படுகிறது.*

*நமது வேதப் பாடப் பகுதியானது, இவ்வுலகம் இருளில் உள்ளதென்று அறிவிப்பது மட்டுமின்றி, கிறிஸ்தவர்கள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கின்றார்கள் என்றும் கூறுகிறது. கிறிஸ்தவர்கள் ஒளியைக் கொண்டுள்ளவர்களாய் இருக்கின்றார்கள். நீங்கள் இயேசுவையும் வேதாகமத்தையும் அறிந்திருந்தால், நீங்கள் திருமணம், பெற்றோர்த்துவம், பிரச்சனைகளைக் கையாளுதல் எப்படி, மற்றும் வாழ்க்கை என்பது என்ன என்பவற்றைப் பற்றி, கல்வியில் முனைவர் பட்டம் பெற்ற எவரொரு*

*வரையும் விட அதிகமாய் அறிகின்றீர்கள்.*[3]

*நாம் இயேசுவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில், நமது வெளிச்சத்தை ஒளிரச் செய்ய வேண்டும். நாம் சரியான வாழ்க்கை வாழ்தல் மூலம் அதை ஒளிரச் செய்கின்றோம். நாம் தேவனுடைய வசனத்தைப் போதிப்பதன் மூலம் அதை ஒளிரச் செய்கின்றோம்.*[4]

*நான் இவ்வுலகத்தில் ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய ரீதியான இருளை விரும்புவதில்லை. இருள் என்னை உற்சாகம் இழக்கச் செய்கிறது என்பதை நான் அறிக்கை செய்ய வேண்டும். சிலவேளைகளில் நான் விட்டுக் கொடுத்து விடலாமா என்று உணருமளவுக்கு இருளானது மிகவும் திண்மையாக/கனமாக வளருகிறது. அப்படிப்பட்ட வேளைகளில், இருள் இல்லையென்றால் வெளிச்சத்திற்கு வேலை இல்லை என்று நான் எனக்கே நினைவூட்டிக் கொள்வது உண்டு. இருளை விரட்டுதலே வெளிச்சத்தின் நோக்கமாக உள்ளது. அதற்காகத்தான் தேவன் இவ்விடத்தில் இவ்வேளை யில் என்னை வைத்து இருக்கின்றார்!*[5]

*பிலிப்பியர் 2:14-16 ஒரு இன்றியமையாத வசனப்பகுதியாக உள்ளது. பவுல் தமது வாசகர்களிடத்தில், "... உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளு மாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப் பில்லாமலும் செய்யுங்கள்" என்று அறைகூவல் விடுத்தார்.*

*இதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்: இருள் எவ்வளவுக்குக் கருமை யாக உள்ளதோ அவ்வளவுக்கு ஒளியானது பிரகாசமாகத் தோன்றுகிறது. எனது படுக்கையறையில் உள்ள மின்பொருள் ஒன்றில் ஒரு சிறு பச்சை நிற விளக்கு எந்நேரமும் எரிந்துகொண்டிருக்கும். அதன் வெளிச்சம் பகல் பொழுதுகளில் கண்ணால் காணக்கூட முடியாததாக இருக்கும். ஆயினும் இரவு வேளைகளில், எனது கண்கள் இருளுக்கு பழகியபின்பு, அந்த மென்மையான பச்சை நிற ஒளியில் என்னால் எனது அறையில் உள்ள எல்லாப் பொருட்களையும் காணமுடியும். எல்லாம் இருளாயிருக்கும் போது, மிகச் சிறிய வெளிச்சமும் கூட மதிப்பு உடையதாக உள்ளது.*[6]

*நமக்குள்ளாக ஒளியூட்டும் வல்லமையொன்று இருக்கிற காரணத் தினால் நாம் "வெளிச்சமாக" இருப்பது இல்லை என்பதை நான் இவ்விடத் தில் வலியுறுத்தியாக வேண்டும். இதற்கு மாறாக, வெளிச்சத்தின் ஆதாரமூல மான தேவனுடனும் இயேசுவுடனும் நமக்குள்ள தொடர்பின் காரணமாக நாம் "வெளிச்சமாய்" இருக்கின்றோம். கிறிஸ்தவர்களை, சூரியனின் ஒளியைப் பிரதிபலிக்கிற சந்திரனுடன் ஒப்பிடலாம். நாம் வெளியில் உள்ள மின்சார சக்தியின் வல்லமையுடன் இணைக்கப்பட்டு அதன் மூலம் எரிகிற மின்விளக்குக்கும் ஒப்பிடப்பட முடியும். இருந்தபோதிலும், "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்ற வார்த்தைகளினால் இயேசு நம்மைக் கனப்படுத்தினார்.*

## ஒரு அறைகூவல்

*கிறிஸ்துவின் வார்த்தைகள் வெறும் பாராட்டாக மட்டும் இருப்ப தில்லை, ஆனால் அவைகள் ஒரு அறைகூவலாகவும் உள்ளன. நாம் நமது வெளிச்சத்தை பிரகாசிக்க/ஒளிரச் செய்ய வேண்டும்.*

*இயேசு, "மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது" என்று கூறினார் (வ. 14ஆ). அந்த நாட்களில், நகரங்கள் குறைந்த பட்சம் இரண்டு காரணங்களுக்காக குன்றுகள் அல்லது மலைகள்மீது கட்டப்பட்டன. முதலாவது ஒரு நடைமுறைக்கு உகந்த காரணமாக இருந்தது: இது மதிப்புமிக்க விவசாய நிலத்தை வீணடிக்காது. இரண்டாவது ஒரு பாதுகாப்புக்கு உகந்த காரணமாக இருந்தது: குன்று ஒன்றின் உச்சியில் இருந்து, அங்கு குடியிருப்பவர்கள் தங்கள் விரோதிகள் கீழே நெருங்கு வதைக் காண முடியும்.[7] பயணம் செய்கின்ற ஒருவர், தாம் ஒரு நகருக்கு வந்து சேர்வதை எப்போதுமே கூற முடியும்: அது அங்கு ஒரு குன்றின்மீது அமைந்திருந்தது. மனிதர்கள் தங்கள் நகரங்களைக்கூட மறைக்காதிருந்தது போன்றே, நாம் நமது வெளிச்சத்தை(செல்வாக்கை)யும் மறைக்கக் கூடாது என்பதே இயேசுவின் கருத்தாக இருந்தது. அந்த நடைமுறைப் பயன்பாடு பின்தொடர்ந்த வார்த்தைகளில் தெளிவாக உள்ளது.*

*இயேசு, "விளக்கைக் கொளுத்தி அதை ஒரு கூடையின் கீழ் வைக்கா மல்" என்று கூறினார் (வ. 15அ).* KJV *மற்றும் தமிழ் வேதாகமங்களில் "விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல் ..." என்று உள்ளது. நாங்கள் பயன்படுத்திய மரக்கால் கூடைகள் மிகவும் துளையுடையவை களாய் இருந்த காரணத்தினால், இது நான் சிறுபிள்ளையாக இருந்தபோது என்னை மிகவும் குழப்பம் அடையச் செய்தது. அந்தக் கூடைகள் ஒன்றின் கீழ் நான் ஒரு விளக்கை/மெழுகுவர்த்தியை கொளுத்தி வைத்தால், அந்தக் கூடையின் இண்டு இடுக்குகள் வழியாக வெளிச்சம் வெளியே பாய்ந்து வரும். 1995ல் வெளியான* NASB *வேதாகமத்தில், இது* "a peck-measure" *("அளக்கும் உழக்குப்படி") என்றுள்ளது. இது ஏறக்குறைய ஒரு மரக்கால்[8] தானியம் கொள்ளக்கூடிய ஒரு பெரிய மண்பாத்திரமாக இருந்தது. அப்படிப்பட்ட திடமான கொள்கலன்கள் ஒன்றின் கீழ் விளக்கை வைத்தால் அது அவ்விளக்கின் வெளிச்சத்தை மறைத்து விடும்.[9]*

*நமது விளக்கை மரக்காலின் கீழ் வைத்தல் என்பதன் விவரிப்பானது, "நீங்கள் நினைப்பதைவிட நீங்கள் அதிகம் மதிப்பு வாய்ந்தவராக இருக்கின்றீர்கள்" என்ற பிரசங்கத்தில் உப்பு தனது உப்புத்தன்மையை இழந்து போகுதல் என்ற அதே அடிப்படை அர்த்தத்தைக் கொண்டுள்ளது. உப்புத் தன்மை இல்லாத "உப்பு" மதிப்பு எதையும் கொண்டிருப்பது இல்லை; அதுபோன்றே மறைவாக உள்ள வெளிச்சமும் மதிப்பு எதையும் கொண்டிருப்பது இல்லை. உப்புக்குவியல் ஒன்று தனது உப்புத்தன்மையை இழந்துபோகும் சாத்தியக்கூறு இருப்பதைப்போலவே, ஒரு வெளிச்சமானது இருளை விரட்டும் தனது தன்மையை இழந்துபோகும் சாத்தியக்கூறு உள்ளது. அது எவ்வாறு நடக்க முடியும்? வெளிச்சமானது மறைவாயிருக்க முடியும். இயேசுவைப் பின்பற்றுவதாக உரிமைகோருபவர்களில் பலர், தங்கள் வெளிச்சத்தைத் துரதிர்ஷ்டவசமாக அறியாமை என்ற "மரக்காலின்"*

கீழாகவோ அல்லது உலக எண்ணம் என்ற "மரக்காலின்" கீழாகவோ அல்லது அரைமனதாயிருத்தல் என்ற "மரக்காலின்" கீழாகவோ மறைத்திருக்கின்றார் கள்.[10] இதில் கடைசி வகையினரைப் பற்றி, "இருமனமுள்ள தன்மையை (வீண் சிந்தனைகளை) நான் வெறுக்கின்றேன்" என்று தேவன் கூறினார் (சங். 119:113அ) - அதாவது, பிரிவினை உடைய பற்றுறுதி கொண்ட தன்மையைத் தேவன் வெறுக்கின்றார். மொஃப்பாட் என்பவர் இவ்வசனத்தை, "இரு மனதுள்ள மனிதர்களை நான் வெறுக்கின்றேன்'' என்று மொழி பெயர்த்தார்.

இயேசுவின் நாட்களில், மக்கள் விளக்குகளைக் கொளுத்தி மரக்கால் களின் கீழ் வைக்கவில்லை; மாறாக, அவர்கள் விளக்குகளை விளக்குத் தண்டுகளின் மேல் வைத்தார்கள் (வ. 15ஆ). இந்த விளக்கு தண்டுகள் சுவர்களில் உயரத்தில் இருந்தன. சிலவேளைகளில், சுவரில் உள்ள ஒரு மாடம் விளக்குத் தண்டாக இருந்தது; பெரும்பாலும் இது மரம் அல்லது உலோகத்தினால் ஆன ஒரு சிறிய அலமாரியாக இருந்தது. இப்படிப்பட்ட விளக்குத் தண்டின்மீது வைக்கப்பட்ட விளக்கானது ''வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம்" கொடுக்க முடிந்தது (வ. 15இ). அதுபோலவே, "உங்கள் வெளிச்சம் மனிதர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" என்று இயேசு கூறினார் (வ. 16ஆ).

அதை நாம் எவ்வாறு செய்கின்றோம்? இயேசு, "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக் கக் கடவது" என்று கூறினார் (வ. 16). நாம் - வாழ வேண்டியபடி வாழ்ந்து பிறருக்கு உதவுதல் என்ற - ''நற்செயல்களை'' செய்யும்போது நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்க அனுமதிக்கின்றோம்.[11]

மலைப் பிரசங்கத்தை நன்கு அறிந்தவர்களிடத்தில் இருந்து நான் ஒரு மறுப்பை முன்னெதிர்நோக்குகின்றேன்: அடுத்த அத்தியாயத்தில் இயேசு, "மனிதர்கள் காணும்படியாக" ஜெபித்தல் மற்றும் உபவாசித்தல் ஆகிய வற்றிற்கு எதிராக எச்சரிக்கை செய்தார் (மத். 6:5; 6:16ஐக் காணவும்). காணும்படியாகச் செய்வதற்கும் காண்கின்றவற்றைச் செய்வதற்கும் உள்ள வேறுபாடு என்ன? "எண்ணப்போக்கும் நோக்கமும்" என்பது இதற்குப் பதிலாக உள்ளது. மனிதர்கள் கண்டு நம்மைப் புகழ வேண்டும் என்பதற்காக நற்செயல்களைச் செய்வதற்கும், நமது நற்செயல்களைக் கண்டு அவர்கள் தேவனை மகிமைப்படுத்தும்படியாக அவற்றைச் செய்வதற்கும் இடையில் மிகவும் வேறுபாடு உள்ளது.

ஏதேனும் நன்மை செய்வதே நமது வெளிச்சம் என்றால், மனிதர்கள் அதைக் காணவேண்டும். கடைசியில் இரகசியமான சீஷத்துவம் என்பது போன்ற விஷயம் எதுவும் இருப்பதில்லை என்று யாரோ ஒருவர் கூறினார்: இரகசியம் என்பது சீஷத்துவத்தை அழித்துவிடும் அல்லது சீஷத்துவம் என்பது இரகசியத்தை அழித்துவிடும்.

நாம் ஏன் நமது வெளிச்சத்தை பிரகாசிக்க/ஒளிரச் செய்ய வேண்டும்? நாம் நமது சுய செல்வாக்கை வளர்த்துக் கொள்ளுவதை நாடுவதில்லை; மாறாக, நாம் தேவனை மகிமைப்படுத்துவதை நாடவேண்டும். வெளிச்சம்

என்பது தன்னை நோக்கிக் கவனத்தைத் திருப்புதல் என்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை, ஆனால் அது பாய்கின்ற அல்லது ஒளிவீசுகின்ற வற்றை ஒளியூட்டுதல் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளது. தேவபக்தியுள்ள கிறிஸ்தவ வாழ்வை நடத்துதல் என்பதில் நாம் நம்மீது பிறர் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக (இயேசு கூறியபடி) "பரலோகத்திலிருக்கிற [நமது] பிதாவை மகிமைப்படுத்துதல்" என்பதே நமது நோக்கமாக உள்ளது (வ. 16இ).

## முடிவுரை

உப்பும் வெளிச்சமும் முக்கியமானவைகளாக உள்ளன. நமக்குப் பல பொருட்கள் தேவை என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம், ஆனால் மிகச் சில விஷயங்களே நமக்கு இன்றியமையாதவைகளாக உள்ளன. அந்த இன்றியமையாதவைகளில் உப்பும் வெளிச்சமும் உள்ளன; இவைகளின்றி இருக்க நாம் விரும்ப மாட்டோம். இயேசு, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்றும் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர் கள்" என்றும் கூறினார். அந்த வாக்கியங்களில் பொதிந்துள்ள பாராட்டை நாம் மதிப்போம் என்று நான் நம்புகின்றேன். இவ்வார்த்தைகளில் மறைந்துள்ள அறைகூவலை நாம் சந்திக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.

சபையானது எவ்வாறு அறியப்படுகிறது? நீங்கள் ஊழியம் செய்து ஆராதிக்கின்ற சபையை மக்கள் குறிப்பிடும்போது, அவர்கள் என்ன கூறுகின்றார்கள்? அது சிலவற்றிற்காக (அதாவது "உப்பு" என்பதற்காக) நிலைநிற்கிறது என்பதையும், அது கர்த்தருக்காகச் சிலவற்றை (அதாவது "வெளிச்சமாய்" இருத்தல் என்பதை) செய்கிறது என்பதையும் அவர்களின் வார்த்தைகள் சுட்டிக்காண்பிக்கிறதா? உங்களைப் பற்றிய விஷயம் என்ன? நீங்கள் உங்கள் சமுதாயத்தில் எவ்வாறு அறியப்பட்டு இருக்கின்றீர்கள்? நீங்கள் உப்பாக இருக்கின்றீர்களா? நீங்கள் வெளிச்சமாக இருக்கின்றீர்களா?

நாம் நம்மைச் சுற்றியுள்ள பாவம் நிறைந்த உலகத்தைப் பற்றி அடிக்கடி கதறுகின்றோம். நாம், "இது இவ்வாறு மோசமாகிக் கொண்டிருப்பது ஏன்? ஏன்?" என்று கேட்கின்றோம். ஒருவேளை நாம், "உப்பும் வெளிச்சமும் எங்கே? எங்கே?" என்று கேட்க வேண்டும் நாம் ஒவ்வொவரும் "பூமிக்கு உப்பாகவும்" "உலகத்துக்கு வெளிச்சமாகவும்" இருப்பதற்குத் தேவன் நமக்கு உதவுவாராக.[12]

---

குறிப்புகள்

[1]KJVயில் "மெழுகுவர்த்தி" (candle) என்றும் "மெழுகுவர்த்தித் தாங்கி" (candle-stick) என்றும் உள்ளது, ஆனால் ன்வேதாகமம் எழுதப்பட்டுதி சில காலத்திற்குப் பின்பு வரையிலும் மெழுகுவர்த்திகள் கண்டுபிடிக்கப்படவில்லை. மூல வசனத்தில் "விளக்கு" என்றுள்ளது ன்தமிழ் வேதாகமத்திலும் இவ்வாறே உள்ளதுதி. [2]மூல வசனம் "நீங்கள்" என்ற வார்த்தையை வலியுறுத்துகிறது. கிறிஸ்தவராகுதல் என்பது

*இருளில் இருந்து வெளிச்சத்திற்கு வருதல் போன்றது என்ற பல வேதவசனப்பகுதிகள் போதிக்கின்றன (யோவா. 8:12; அப். 26:18; எபே. 5:8; பிலி. 2:14-16; 1 பேது. 2:9 ஆகிய வசனங்களைக் காணவும்). [3]இந்தக் கூற்றானது கல்வியைச் சிறுமைப்படுத்தும் நோக்கம் கொண்டிருப்ப தில்லை. ஒவ்வொரு நபரும் தம்மால் முடிந்த அளவுக்கு அதிகம் கல்வியைப் பெற வேண்டும் என்பதில் நான் நோக்கம் கொண்டுள்ளேன். இந்தக்கூற்று, உலகக் கல்வியை விட வேதாகமக் கல்வியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வலியுறுத்துதலையே நோக்கமாகக் கொண்டுள்ளது. [4]உங்கள் உரையைக் கேட்பவர்களின் சொந்த நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவதற்கு பிரசங்கத்தின் இந்த பகுதியை நீங்கள் விரிவாக்க விரும்பலாம். உங்கள் சமுதாயத்தில் "அவர்களின் வெளிச்சம் பிரகாசிப்பதற்கான" திட்டவட்ட மான வழிமுறைகளை நீங்கள் இவ்விடத்தில் பட்டியலிடுங்கள். [5]தேவனுடைய வெளிச்சம் இருளை விரட்டும் பரலோகத்தில் இருப்பதை நான் முன் கண்ணோக்கியிருக்கின்றேன் (வெளி. 21:25; 22:5). அதே வேளையில், நான் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்ற இருளான இவ்வுலகில் இருக்கின்றேன். [6]சிறிய வெளிச்சமும் கூட இருளில் எவ்வாறு ஒளிர முடியும் என்பதற்கு உங்கள் சொந்த விவரிப்பைப் பயன்படுத்துங்கள். நான் ஒவ்வொருவரும் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றியோ அல்லது ஒரு சிறிய பளிச்சிடும் விளக்கை ஏற்றியோ பெரிய கூடங்களில் இருந்துள்ளேன். இதன் விளைவு விசேஷமானதாக இருக்கிறது. [7]''மலை மீது அமைக்கப்பட்ட'' நகரங்கள் பொதுவாகத் தற்காப்புக்குச் சுலபமானவைகளாக இருந்தன. [8]ஒரு மரக்கால் என்பது எட்டு குவார்ட்ஸ்கள் (ஒரு புஷ்ஷல் என்பதில் நான்கில் ஒரு பங்கு) அல்லது 8.81 லிட்டர்கள் [அல்லது தமிழ் நாட்டில் வழங்குகின்றபடியாக, 6 படிகள்] கொண்டதாகும். [9]ஒரு கோப்பை அல்லது கூடையின் கீழ் ஒரு விளக்கை வைத்தல் என்பது, விளக்கு எரியத் தேவையான உயிர்க் காற்று (ஆக்ஸிஜன்) தீர்ந்து விடும்போது அந்த விளக்கை அணையச் செய்து விடும் - ஆனால் விளக்கை மறைத்தல் என்பதே இயேசுவின் அடிப்படை வலியுறுத்தமாக இருந்தது. [10]"மரக்கால்கள்" பற்றிய இந்தப் பட்டியல் விரிவாக்கப்பட முடியும். நீங்கள் வாழ்கின்ற பகுதிக்கு ஏற்றாற் போன்று இந்தப் பட்டியலைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.*

*[11]இதுவும் உங்கள் உரையைக் கேட்பவர்கள் வாழ்கின்ற பகுதிக்குத் தக்கவாறு "அவர்களின் வெளிச்சம் பிரகாசிக்கும்படியான" திட்டவட்டமான வழிமுறைகளை உள்ளடக்கும்படி விரிவாக்கப்பட வேண்டும். [12]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்டவர்கள் சரியான வகையிலான செல்வாக்கு உடையவர்களாக இருப்பதற்குச் செய்ய வேண்டியவை பற்றி அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு நீங்கள் விரும்புவீர் கள். சிலர் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலம் (மாற். 16:16) கிறிஸ்தவராக வேண்டியது அவசியமாக இருக்கும். உண்மையற்றுப் போன கிறிஸ்தவர்கள் மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றின் மூலம் மீளக்கட்டி எழுப்பப்பட வேண்டியிருக்கும் (அப். 8:22; யாக். 5:16).*